### செராஸ் தமிழ்ப்பள்ளி அருகில் 42 மாடி குடியிருப்பு

# கட்டுமானம் நிறுத்தம்





**ராமேஸ்வரி ராஜா**

கோலாலம்பூர், டிச. 28 -

செராஸ் தமிழ்ப்பள்ளிக்கு அருகில் 42 மாடி குடியிருப்புக் கட்டுமானம் மேற்கொள்ளப்படும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பள்ளி நிர்வாகத்தினர் பெற்றோர் - ஆசிரியர் சங்கம், மேலாளர் வாரியம், முன்னாள் மாணவர் கழகம், பெற்றோர் ஆகியோர் கண்டனம் தெரிவித்ததுடன் டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் திட்டத்தை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### செராஸ் தமிழ்ப்பள்ளிக்கு மிக...

விடுத்தனர். இந்நிலையில், டத்தோ பண்டார் இந்தக் கட்டுமானப்பணிக்கு அனுமதி வழங்கவில்லை எனவும் இதன் வேலைகள் நிறுத்தப்படுகிறது எனவும் தெரிவித்துள்ள தானது எங்கள் பிரச்சினைக்கு விடிவுகாலம் பிறக்கும் எனும் மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்று செராஸ் தமிழ்ப்பள்ளியின் மேலாளர் வாரியத் தலைவர் குமார் வீரன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

எங்கள் பிரச்சினையை மக்கள் ஓசை தரப்பு நேரடியாக வந்து சந்தித்து தகவல் பெற்றதுடன் அதனைத் தலைப்புச் செய்தியாகவும் வெளியிட்டது. அதன் சமூக வலைத்தளங்களிலும் காணொளி செய்தியாக பதிவிட்டிருந்தது.

எங்கள் பிரச்சினை பிரதமர் கவனத்திற்கும் அரசுத் தரப்பு, செராஸ் நாடாளுமன்ற உறுப்பினர் தரப்பு, டத்தோ பண்டார் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு மக்கள் ஓசை செய்தி மிகவும் துணைபுரிந்தது. இவ்வேளையில், பெற்றோர் - ஆசிரியர் சங்கம், மேலாளர் வாரியம், முன்னாள் மாணவர் கழகம், பெற்றோர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் குறிப்பிட்டார்.

முறையான அனுமதியின்றி கட்டுமான நிறுவனம் வேலையை தொடங்கியிருந்தது. இதன் அடிப்படையில் பள்ளி கட்டடம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. மாணவர்கள் சுகாதார அளவிலும் மனோ ரீதியிலும் பாதிக்கப்பட்டதுடன் அதிரும் சத்தத்தினால் மன உளைச்சலையும் எதிர்கொண்டனர். இதனால் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு பெற்றோர் தயங்கினர்.

இந்நிலையில் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 10ஆம் தேதி பிரதமர் தரப்பு, டத்தோ பண்டார், கோலாலம்பூர் மாநகர் மன்றம், கல்வி அமைச்சு, கூட்டரசுப் பிரதேச அமைச்சு, அடிப்படை கட்டமைப்பு இலாகா, செராஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டான் கோக் வாய் போன்ற பல்வேறு தரப்புகளுக்கும் கடிதம் அனுப்பியிருந்தோம்.

இதனைத் தொடர்ந்து, அடிப்படை கட்டமைப்பு இலாகாவினர் பள்ளிக்கு வந்து விவரங்களைப் பெற்றுக்கொண்டனர். செராஸ் காவல்துறையினரும் அழைத்து விவரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை செராஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டான் கோக் வாய் வருகை புரிந்து பிரச்சினையைக் கேட்டறிந்தார். இங்குள்ள மக்களுக்கும் மாணவர்களுக்கும் இந்தக் கட்டுமானப்பணி மன அமைதியைக் குலைக்கும் வண்ணம் இருகிறது என்பதுடன் மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்துகொண்ட அவர் டத்தோ பண்டாரின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்றார்.

இந்நிலையில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் கட்டுமானப்பணியை நிறுத்துமாறு உடனடியாக அறிவிப்புப் பலகை வைத்ததுடன் வளாகத்தைச் சுற்றிலும் தடுப்பு சீல் அமைத்தது.

இது செராஸ் தமிழ்ப்பள்ளி எதிர்நோக்கிய பிரச்சினைக்கு மிகப்பெரிய தீர்வு கிடைக்கப்போகிறது என்கின்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனவும் குமார் தெரிவித்தார்.